# பக்தி பலன் தருமா?

சிந்தனை விருந்து - 005

ஓர் இடிந்துபோன வீட்டில் ஏராளமான எலிகள் குடியிருந்தன. கடைகளிற் புகுந்து துவம்சம் செய்து வயிறு வளர்த்தன. எல்லாம் கொழுத்துக் கிடந்த போது மழை பெய்து வெள்ளம் வந்தது. எலிகளின் வளைகளில் எல்லாம் நீர் நிரம்பி; அவை வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்டுத் திக்கு முக்காடி இறந்துபோக; ஒரு எலி மட்டும் நீச்சலிட்டு; அங்கே பெரிய மரம் மிதப்பதைப் பார்த்து அதில் ஏறியது. மரம் வெள்ளத்தில் மிதந்து வெகு தூரம் போய் கரை ஓரமாக ஒதுங்கியது. எலி உடனே வெளியிற் குதித்துத் தப்பி ஓடியது.

வாழ்க்கையில் தம் விருப்பப்படி வாழ்ந்தவர்கள்; பின்னால் எதிர்பாராத கஷ்டங்களாற் பாதிக்கப்படும் போது; பக்தி என்ற மரம் கிடைத்து விட்டாற் போதும்; அது அவர்களைக் காப்பாற்றிவிடும்.

தொகுப்பு : மகா.